**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.84/14 நாள்.25.01.2021**

2021-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாள் மனுதாரர் தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூங்காவனம் | தொழில் | |
| த.பெ/க.பெ. | முனுசாமி | சாதி | |
| கிராமம் | கஞ்சமலைபுரவடை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 50 |

**ம.சா. 1**
**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன சின்னதுரை எனது மகன். என் மகன் என்ன வேலை செய்தார் என்றால், திருமலா பால்கம்பனியில் வேலை செய்தார். என் மகன் வேலை செய்ததை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் சம்பளம் குறித்த விவரமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது, நான் கேள்விபட்டுதான் நான் மருத்துவமனையில் சென்று பார்த்தேன். என் மருமகன் ராஜேஷ் போன்மூலமாக இந்த விபத்து எப்படி நடந்தது என்று சொன்னார். இந்த விபத்து சம்பந்தமாக என் மருமகன் அல்லது உறவினர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மகன் சென்ற டாடா ஏசி ஓட்டுனர் அதிவேகமாக முன் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்று டாடா ஏசி வாகனத்திற்கு முன்பு சென்று கொண்டிருந்த லாரியின் பின்புறம் மீது விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. என் மகன் அமர்ந்து சென்ற டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டதாக

போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. யார் தவறால் விபத்து நடந்தது என காண்பிக்கக்கூடிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் அமர்ந்து சென்ற டாடா ஏசி ஓட்டுனர்தான் அவருடைய கவனக்குறைவுதான் இந்த விபத்துக்கு காரணம் என்பதால் 4ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்திடம்தான் நாங்கள் இழப்பீடு பெறவேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எங்களுக்கு எந்த இழப்பீடும் கொடுக்கக்கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொருத்து என் மனு தள்ளுபடிக்கு அருகதையானது என்றால் சரியல்ல. என்னுடைய மகன் வேலை மற்றும் சம்பளம் பற்றிய முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களும் மோட்டர் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யாததால் என் வழக்கு தள்ளுபடிக்கு அருகதையானது என்றால் சரியல்ல. நாங்கள் இழப்பீடு ஏதேனும் பெறவேண்டும் என்றால், எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்துதான் காப்பீட்டு பெறவேண்டும் என்றால் சரியல்ல.